REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 24உ புதன் (6—2—57) ★ ★ வெளியூர்: தை 25உ வியாழன் (7—2—57) [இதழ் 206

வேலை நிறுத்தம் நடைபெறாத நாட்கள் உண்டா?

காங்கிரசாட்சியில் வேலைநிறுத்தம் நடைபெறாத நாட்களே இல்லை எனலாம். அந்த அளவுக்கு ஆட்சியாளர்கள், மக்களால் வெறுக்கப்படுகிறார்கள்!

வடக்கு பீகாரில், தபால்-தந்தி இலாகா ஊழியர்கள், பிப். 4-ந் தேதி 24 மணிநேர அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஊழியருக்கு கஷ்டஈடு அலவன்ஸ், வீட்டு வசதிகள் முதலியன வேண்டும் என்பனபோன்ற தங்கள் கோரிக்கைகளை ஏற்க மறுக்கும் ஆட்சியாளருக்கு எதிராகவே இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றிருக்கிறது.

அழுது புலம்புகின்ற ஏழை மக்கள் சிரிப்பது எப்போது?

ரூ. 2,000 கோடி செலவிட்ட பின்னரும் மக்களுக்கு வாழ்வு கிடைத்ததா?

காஞ்சியில் அண்ணா கருத்துரை

"காங்கிரசின் சர்வாதிகாரத்திற்கு இன்று நாட்டில் மகத்தான எதிர்ப்பு தோன்றியிருக்கிறது. எல்லா முற்போக்குக் கட்சிகளும், முற்போக்கு எண்ணம் கொண்டோரும், இவர்கள் மட்டுமல்ல—வெறும் தேர்தல் எண்ணம் கொண்டோரும் கூட இன்று தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

சர்வாதிகார வெறி

"1952-ம் ஆண்டுத் தேர்தலில் இருந்ததைவிட இன்று காங்கிரசுக்கு எதிர்ப்பு வளர்ந்திருக்கிறது. இது, 'ஜனநாயகம் பிழைக்குமா' என்று சந்தேகப்பட்டோருக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. காங்கிரசின் சர்வாதிகாரத்தில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பு, நல்ல எதிர்ப்புச் சக்திகளாக வளர்ந்திருக்கிறது.

"வெறிநாய் ஒன்று வீதியிலே போகிறதென்றால், கல் கிடைத்தவர்கள் எல்லாம் அதனைத் தாக்கித் துரத்துவார்கள். கல் கிடைக்காதவர்கள் 'அடியுங்கள், அடியுங்கள்,' என்று வது குரல் கொடுப்பார்கள். அதுபோல, சர்வாதிகார வெறி கொண்ட காங்கிரசை, இன்று எல்லாக் கட்சிகளும் எதிர்க்கின்றன.

"நண்பர்கள், நான் காட்டிய உதாரணம் கண்டு கோபிக்க வேண்டாம்; வெறித் தன்மையை மட்டுமே நான் உதாரணத்திற்குக் கூறுகிறேன்.

"தேர்தல் என்பது, ஆடையை அவ்வப்போது வெளுப்பதுபோல!

ஆடை வெளுப்பதே....!

"ஆட்சி பீடத்தில் ஏறியிருக்கும் அழுக்கை வெளுப்பதற்குத்தான் தேர்தல். எப்படி வெளுப்பது, எதைக்கொண்டு வெளுப்பது என்பதில் கட்சிகளுக்கிடையே வேற்றுமை இருக்கலாம். ஆனாலும், ஆடை வெளுக்கப்பட வேண்டியது என்பதில் வேற்றுமை இருக்கமுடியாது. ஆனால் காங்கிரஸ் கூறுகிறது—'அழுக்கேறியபடியே ஆடை இருக்கட்டும்',—என்று! நியாயமா? வாக்காளர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அவர்களே எதிர்க்கிறார்கள்!

"இன்று, காங்கிரசை, எதிர்க்கட்சிகள்தான் எதிர்க்கிறது என்பதல்ல; காங்கிரசாரே எதிர்க்கின்றனர்!

அவர் தந்திரம்

"காமராசர் ஓராண்டுக்கு முன்னால், 'இந்த தி மு கழகத்தினரை ஒழிப்பதற்கு எனக்குத் தந்திரம் தெரியும்; பெரியாரைப் பிடித்து வைத்திருக்கிறேன்; அவரை இவர்கள்மீது ஏவிவிட்டு, இவர்களை அவர்கள்மீது ஏவிவிட்டு...' என்றெல்லாம் பேசினார்.

நானும் அறிந்ததே!

"அப்போதே நான் கூறினேன்—'இந்தத் 'தந்திரம்' அண்ணாதுரைக்கும் தெரியாததல்ல; காமராசர் வேண்டுமானால் என்னிடத்தில் அறைகூவல் தரட்டும். ஒரு ஆறுமாத காலத்தில், காமராசர் காங்கிரஸ்—கரையாளர் காங்கிரஸ் என்று இரண்டு காங்கிரசை உண்டாக்கிக் காட்டுகிறேன்' என்று!

நான் செய்யவில்லை

"ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை; தானாகவே காங்கிரஸ் இன்று அப்படிப் பிளந்து நிற்பதைக் காண்கிறோம். காங்கிரசை, காங்கிரசாரே எதிர்க்கின்றனர்.

எங்கே காங்கிரஸ்?

'முதலியார் என்று ஒருவர் கூறினால், அவரை, 'ஆற்காடா, பேட்டையா? அக்கரையா, இக்கரையா? தொண்டை மண்டலமா, தளுவ வேளாளமா?—என்று கேட்கிறார்களல்லவா? அதுபோல இன்று, காங்கிரஸ் என்று கூறினால், காமராசர் காங்கிரசா, கரையாளர் காங்கிரசா, ஆச்சாரியார் காங்கிரசா என்று கேட்க வேண்டியிருக்கிறது. உருவான காங்கிரஸ் எங்கே?

குறை களைய முடிந்ததா?

"இந்த நிலை வளர்ந்துவரும் காங்கிரசால், கடந்த 10 ஆண்டுக் காலத்தில் நாட்டு மக்களின் குறைகளைக் களைய முடிந்ததா என்றால், இல்லை.

"நாட்டில் கிராமங்கள் இருக்கும் நிலையை எண்ணினால் இது புரியும். கிராம மக்களின் எந்த தேவையும் பூர்த்தி செய்யப்படவில்லை; பல கிராமங்களுக்குச் [illegible]ப் பாதைகளே இல்லை; பல கிராம மக்களுக்கு வீடுகளே இல்லை; எண்ணற்றோர் சேரிகளில் வாழுகிறார்கள்!

"மழை பெய்தால், பல கிராமங்கள் சிறு தீவுகளாகிவிடும். இந்த நிலையைக் காண்கிறோம்—பத்தாண்டுக் கால காங்கிரஸ் ஆட்சிக்குப் பின்னும்! பின், எப்படி எதிர்க்காமலிருக்க முடியும்?

"ரூ. 2,000 கோடி செலவிட்டாகிவிட்டது என்கிறார்கள். அதற்குப் பின்னும் இந்த நிலை நீடிக்கிறதே! ஏன் இந்த மக்கள் இப்படி அவதிப்படுகிறார்கள்? இவர்கள் அழுது கொண்டே இருக்கிறார்களே! இவர்கள் சிரிப்பது எப்போது? எப்பொழுது இவர்கள் வயிறார உண்ணுவது? எப்பொழுது இந்த மக்கள் தலையில் எண்ணெயைக் காண்பது? எப்பொழுது இவர்கள், சுகாதாரமான குடில்களில் குடியிருப்பது? இப்பொழுது இவர்கள் வீடுகளில் சிறிதேனும் மகிழ்ச்சி பிறப்பது? ரூ. 2,000 கோடி செலவிட்டோம் என்று கூறிப் பயன் என்ன? இதனை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

"திராவிட முன்னேற்றக் கழகம் இதைத்தான் கேட்கிறது. பாட்டுக் கச்சேரி செய்கிற காங்கிரசை, 'சுருதி' சரியில்லை என்று கச்சேரி கேட்கிற நாம் கூறினால், உடனே 'நீ என்ன கேட்பது?'—என்றால், என்ன பொருள்?

"வேண்டுமானால், துணிவிருந்தால் கச்சேரி மேடையில் எங்களை அமர்த்திப் பாடச் சொல்; 'சுருதி' மாறுபட்டால், தாளம் தப்பினால், பிறகு கேள்; அதுதானே நியாயம்? தி. மு. கழகம் அதைத்தானே வலியுறுத்திக் கூறுகிறது?

"இப்படிக் கூறும் எங்கள் மீது கோபப்பட்டுப் பயன் இல்லை; நாட்டு நிலைமை அது!

"ஒரு காலத்தில் காங்கிரசில் இருப்பது பெரும் பெருமைக்குரியதாயிருந்தது; ஆனால் இன்று? நீங்கள் சேருகிறீர்களா? நீங்கள் சேருகிறீர்களா?—என்று வீதி வீதியாக விலை கூறி விற்கப்படும் மலிவுச் சரக்காகிவிட்டது.

★

அறிவிப்பு

★★★★★★★★★★★★★★★★★

9—2—57 சனி (வெளியூர் 10—2—57) 'நம் நாடு' இதழில் சென்னை சட்டசபை, பாராளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் தி. மு. கழக அபேட்சகர்கள், கழக ஆதரவு பெற்ற அபேட்சகர்களின் முழுப் பட்டியலும் வெளியிடப்படும்.

★★★★★★★★★★★★★★★★★

ஏஜெண்டுத் தோழர்களுக்கு:

9—2—1957 (வெளியூர் 10—2—1957) 'நம் நாடு' இதழில் தி. மு. கழக அபேட்சர்கள், கழக ஆதரவு பெற்ற அபேட்சகர்களின் முழுப் பட்டியலும் வெளியிடப்பட இருப்பதால் அதிகப் பிரதிகள் வேண்டுவோர் உடனடியாகத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அண்ணா-காமராசர் சந்தித்த நிலைமை

'வாய்க்கரிசி' போட நினைத்தார்?

கேலி பேசுவோர் தெளிவு பெறட்டும்

"யார் யாரை எல்லாம்கூட காங்கிரசில் சேர்த்துவிட, காங்கிரசுடன் ஒத்துப்போகச் செய்ய முயற்சி நடைபெற்றது தெரியுமா?

சந்திப்பு

"காங்கிரசுடன் என்னை ஒத்துப் போகச் செய்வதற்காக—என்னைச் சரிக்கட்டிக்கொள்வதற்காக, தான் பதவிக்கு வந்தவுடன் காமராசர் என்னைச் சந்தித்தார்; ஒரு முறையல்ல—இரு முறை!

"'தலைவர் உங்களைப் பார்க்க வேண்டுமென்கிறார்'— என்று, ஓயாது என்னிடம் கூறிவந்தார் திரு. மாரிசாமி—'பேரிகை' ஆசிரியர். அப்போதெல்லாம் அவர், காமராசரை, 'தலைவர்' என்றுதான் அழைப்பது வழக்கம்.

"நீங்கள் விரும்பினால், 'அறிவகத்'திற்கே காமராசர் வருவார்— என்று என்னிடம் தோழர் மாரிசாமி கூறினார். நான் மறுத்து வந்தேன். 'சந்தித்தாக வேண்டும்,' என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது, காமராசர் என்னைச் சந்தித்தார்.

எங்கே?

எங்கே தெரியுமா? என்னை சினிமாக் கட்சிக்காரன் என்று, அழகேசர்கள் கேலிபேசுகிறார்களே, அவர்களுக்காகக் கூறுகிறேன்—உங்கள் தலைவர் என்னை, ஒரு சினிமாத் தயாரிக்கும் கம்பெனியில் வந்து பார்த்தார்.

மறுப்பாரா?

இதனை மறுத்துரைப்பாரா, காமராசர்? ஒருவேளை மறுக்கலாம் என்பதற்காகத்தான், சாட்சி வைத்துக்கொண்டு இவரைச் சந்தித்தேன்

இருந்தவர் யார்?

"அன்று என்னுடன் இருந்தவர்கள் முத்தமிழ் கலாவித்துவ ரத்தின டி. கே. ஷண்முகம், தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த தோழர் உமாபதி, ஜூபிடர் படக்கம்பெனி அதிபர் சோமசுந்தரம், நண்பர் சி வி. இராசகோபால் ஆகியோராவர்.

வந்தார்!

"காமராசர் கார், சினிமாக் கம்பெனிக்கு வந்தது; என்னை அறியாத காமராசர், 'காரின் கதவைத் திறந்து நான் அவரை வரவேற்பேன்' என்று எண்ணினார் போலும்! என்னைவிட நீண்ட நாள் அரசியலில் இருந்தாலும், காமராசர் என்னை அறியமாட்டார். நான், ஏழையின் செருப்புகளைத் தூக்கிவந்தாலும் வருவேன்; பணக்காரர்களுக்கு — பதவியிலிருப்போருக்குப் பணிந்து போக மாட்டேன் என்பதை அவர் அறியமாட்டார்.

(பலத்த கையொலி)

பாவம்!

"பாவம்! காமராசர் காரிலேயே உட்கார்ந்திருந்தார்; சில நிமிட நேரங்கழித்து, தலையை வெளியே நீட்டிப் பார்த்தார்; அப்போதாவது யாராவது வரமாட்டார்களா என்று!

"அப்போது ஜூபிடர் சோமசுந்தரம்கூட, 'போகட்டுமா?' என்றார். 'எவரும் போகக்கூடாது' என்றேன். பின்னர் அவராகவே கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தார்.

"பிறகுதான், உடனிருந்தவர்களை வைத்துக்கொண்டு பேசினோம். 'இவர்கள் எல்லாம் என்னுடனிருக்கக்கூடாது' என்றார், காமராசர். நான், 'இருக்கத்தான் செய்வர்' என்றேன்.

"அவர் என்னைச் சந்தித்ததற்குக் காரணம், எனக்கு 'வாய்க்கரிசி' போட்டு, என்னைச் சரி செய்து கொள்ளலாம் என்பது!

"அவர் அறியமாட்டார்— 'அண்ணாதுரை வாய் திறந்தால் போடுவதற்கு அவர்களிடத்தில் அரிசி இல்லை' என்பதை!

"தி. மு. கழகத்தை ஏதேனும் ஆசைகாட்டி ஏமாற்றிவிடலாம் என்று முயற்சித்துத் தோல்வி கண்ட பின்னர் தான் காமராசர், காரசாரமாகப் பேசுகிறார் என்பதை காமராசரின் நண்பர்கள் உணரட்டும். காங்கிரசின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் நண்பர்கள் உணரட்டும்! எங்களைக் கேலி பேசுவோர் உணரட்டும்!"

தொழிலாளர்கள் குடியிருப்பு நிலை!

புதுடில்லி, பிப். 5—

"தொழிற்சாலைகளை நகரங்களில் நிர்மாணிப்பதால், தொழிலாளர்கள் குடியிருப்பதற்கு வீடு கிடைக்காமல் சேரி போன்ற பகுதிகளில் வாழவேண்டியிருக்கிறது; ஆனால் அவர்கள் மனம் உடைந்துவிடுகின்றனர்; ஆகவே, கூடுமானவரையில் புதிய தொழிற்சாலைகளை கிராமப் பகுதிகளிலேயே நிர்மாணித்தால் தொழிலாளர்கள் கிராமங்களிலேயே வசிக்க முடியும்" என்று, திட்டக் குழு உறுப்பினர் டாக்டர் ஜே சி கோஷ் கூறியிருக்கின்றார்.

தாயகமே! தமிழகமே! திராவிடமே!

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6—2—'57 புதன்

அடக்குமுறை வெறியை ஒழிக்க!

ஜனநாயகம் விதிக்கிற எல்லைகளுக்குள்ளிருந்து, அமைதி கெடாமல் அறவழி நின்று, தங்களது கோரிக்கைகளை ஆர்ப்பாட்ட உருவில்—கிளர்ச்சி வடிவில் வெளியிடுகிற மக்களை 'காட்டுமிராண்டிகள்' என்று ஏசுகிற பெரிய மனிதர்கள், கடந்த பத்து ஆண்டுக்காலத்தில் நடத்தியுள்ள காட்டுராஜ தர்பாரைக் கணநேரம் எண்ணினால், உடல் சிலிர்க்கும்.

கணக்கிட முடியாத தடவைகள் காங்கிரஸ் ஆளவந்தார்கள், மக்கள் கூட்டத்தை நோக்கித் துப்பாக்கியை நீட்டி, 'குதிரை'யைச் சுழற்றிக் குருவிகளை வேட்டையாடுவது போலச் சுட்டு வீழ்த்தி, தங்களது குருதித் தாகத்தைத் தணித்துக்கொள்ள—அகிம்சைப் பசியை அடக்கிக்கொள்ள முயற்சித்திருக்கிறார்கள்; ஆனாலும் அவர்களது தாகம் தணிந்ததில்லை—பசி அடங்கியதில்லை.

கடந்த பத்து ஆண்டுக் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் நடைபெற்றத் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்கள், தமிழ் மக்கள் உள்ளத்தில் இன்னும் பசுமையாகவே இருக்கின்றன. என்றாலும், தங்களது அகிம்சை வழி ஆட்சி முறையைத் தமிழ் மக்கள் மறந்துவிடக் கூடாது என்று கருதியோ என்னவோ, காமராசர் ஆட்சி, வால்பாறைத் தோட்டத் தொழிலாளர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, நான்கு பேர்களுடைய உயிரைக் குடித்திருக்கிறது.

தங்களுடைய ஊதியப் பிரச்சினை குறித்து நீதிமன்றத் தீர்ப்பை அமுலாக்குமாறு கோரி வால்பாறை தோட்டத் தொழிலாளர் பத்தாயிரம் பேர் வரை, கடந்த ஜனவரி 26-ந் தேதியன்று ஊர்வலம் புறப்பட்டனர். இதற்கு முன்பாக அவர்கள், நீதிமன்றத் தீர்ப்பு அமுலாக்கப்படவில்லையானால், வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதெனவும் முடிவு செய்திருந்தனர். தங்களுக்குச் சாதகமாக நீதிமன்றம் வழங்கியிருக்கும் ஒரு தீர்ப்பை, நேர்மையுடன் அமுல் நடத்துமாறு தொழிலாளர்கள் கோருவதில் தவறு என்ன? அப்படி, தங்கள் கோரிக்கையைத் தெரிவிப்பதற்காக ஊர்வலம் நடத்தியது தவறு என்கிறதா, காமராசர் ஆட்சி? பின், அங்கு துப்பாக்கிப் பிரயோகமும் பிணக்காடும், இரத்த வெள்ளமும் ஏற்படுவானேன்? மக்களின் உயிர், இந்த மமதையாளர்களுக்கு அத்தனை சாதாரணமானதாகத் தெரிகிறது என்பதைத் தவிர, வேறு என்ன?

கடந்த ஆண்டு பிப்ரவரி 20-ந் தேதியன்று தமிழகமெங்கணும் அர்த்தால் நடைபெற்றபோது, தமமம்பட்டி என்ற சேலம் மாவட்டக் கிராமத்தில் சுமார் 75 பேர் கொண்ட ஊர்வலத்தின்மீது துப்பாக்கிப்பிரயோகம் நடத்தி, கழகத் தோழர்கள் பலரைப் படுகாயப்படுத்தி முடமாக்கியது, இந்த காமராசர் சர்க்கார். அந்தச் சம்பவம் குறித்த வழக்கின்மீது தீர்ப்பளித்த ஆத்தூர் வட்ட நீதிபதி, 'துப்பாக்கிப் பிரயோகத்திற்கு அவசியமே இருக்கவில்லை' என்று கூறியிருக்கிறார். அப்போதே நாம், இங்கு, சர்க்காரின் மிருகத்தனமான—முன்யோசனை இல்லாத அடக்குமுறைப் போக்கினை வன்மையாகக் கண்டித்திருந்தோம்.

இந்த அகிம்சா மூர்த்திகளின் ஆட்சியில், 'கொல்வதற்குச் சுடு' என்ற முறையில் பழக்கப்படும் போலீசாரை ஏவி மக்களைச் சுட்டு வீழ்த்தும் வெறி, தணியக்காணோம். வால்பாறையில் 4 பிணங்கள்—இரத்த வெள்ளம் என்ற காட்சி!

ஒரு துப்பாக்கிப் பிரயோகம் பற்றி ஒரு பொறுப்புள்ள நீதிபதி தந்த தீர்ப்பு, இந்த சர்க்காருக்கு வெட்கத்தைத் தந்திருக்க வேண்டாமா? — வெறியைத் தணித்திருக்க வேண்டாமா?

இவர்கள், மக்களை, மக்கள் என்று எண்ணுபவர்கள் என்றால் அல்லவா, இந்த படிப்பினை அவர்களுக்குப் பயன்படும்? மக்களைச் சாகடிப்பதற்காகவே அரசுக் கட்டிலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கும் குணாளர்கள் அல்லவா இவர்கள்! மக்கள் சாவதைப் பற்றி—கொல்லப்படுவதைப் பற்றி இவர்கள் ஏன் கவலைப்படப் போகிறார்கள்?

'குதிரை கீழே தள்ளியதுமில்லாமல் குழியும் பறித்ததாம்'—பழமொழி சொல்லுவார்கள்; அதுபோல் இருக்கிறது—வால்பாறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, நால்வர் உயிரைக் குடித்துவிட்டு, தொழிலாளர் பலரைச் சிறைப்பிடித்து வழக்குத் தொடர்ந்திருக்கும் காமராசர் ஆட்சியின் போக்கு!

இந்த அடக்குமுறை வெறியை—இரத்த தாகத்தை—உயிர்ப் பசியை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழ் மக்கள், வரப்போகும் தேர்தலில் இந்தக் காங்கிரசாட்சியின் 'கொலைத் தொழிலை' மறந்துவிடக்கூடாது; பாடம் புகட்டத் தவறக்கூடாது.

மண்டல சபை கூட்டம் தேர்தலுக்குப் பிறகுதானாம்

ஐதராபாத், பிப். 5—

சென்னை, ஆந்திரம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களின் பிரதிநிதிகள் கொண்ட மண்டல சபையின் முதலாவது கூட்டம் பொதுத் தேர்தலுக்குப் பிறகுதான் நடைபெறுமாம்.

இம்மாத இறுதியில் மண்டலக் குழுவின் கூட்டம் நடைபெறுமென்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

நடைபாதையில் குடியிருப்போர்

குழந்தைகட்குக் கல்வி?

சென்னை, பிப் 4—

சென்னை நகரசபையால் 279 பள்ளிகளை நடைபெற்று வருகின்றன. இந்தப் பள்ளிகளில் மொத்தம் இவ்வாண்டில் 97 583 குழந்தைகள் படிக்கின்றனராம்.

கடந்த ஆண்டில் 74 449 குழந்தைகள் படித்திருக்கின்றனராம்.

சென்னை நகரில் 45,180 பள்ளி செல்லும் வயதுவந்த குழந்தைகள் இருக்கின்றனர்; நகரின் நடைபாதைகளில் குடியிருப்பவர்களின் குழந்தைகளில் பள்ளி செல்லும் வயதுவந்தவர்கள் 20,000 பேர் இருக்கின்றனர்.

இந்தத் தகவல்கள், சென்னை நகரமன்றம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் காணப்படுகிறது.

பள்ளிச் சிறுருக்குப் பகல் உணவு

இந்தப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்குப் பகல் உணவு அளிக்க, இவ்வாண்டு ரூ 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு படிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க சென்னை சர்க்கார் உதவ வேண்டும் என்று நகரசபை கோரியிருக்கிறதாம்.

எகிப்தில் தங்கச் சுரங்கம்!

கெய்ரோ, பிப் 4—

எகிப்தின் கிழக்குப் பாகத்தில் உள்ள பாலைவனத்தில் தங்கச் சுரங்கங்கள் இருப்பதாக எகிப்தின் தொழில் அமைச்சர் அறிவித்திருக்கிறார். இந்தச் சுரங்கங்களின் மூலம் கிடைக்கும் பணம் மட்டும் அஸ்வான் அணைத் திட்டத்தை நிறைவேற்றப் போதுமானது என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

'நவீன கால உலகின் வருங்காலம் பாராட்டத் தகுந்ததல்ல'

'பொறுப்புமிக்க அரசியல் தலைவர்கள் உலகப் பிரச்னைக்குப் பரிகாரம் தேடத் தவறிவிட்டனர்'

சனநாயகத் தரக் குறைவுக்குக் காரணம் பற்றி டாக்டர் டாயின்பீ கருத்து

பம்பாய், பிப். 5—

"இப்போதைய நவீன கால உலகத்தின் வருங்கால சனநாயகம் பாராட்டத் தக்க வகையில் அமைந்திருக்காது; ஏனென்றால், இந்த அணுயுகக் காலத்தில, சனநாயகம் வெற்றி பெற கடைபிடிக்க நிலையான கொள்கையும் வேண்டிய பொறுமை உணர்வும் நடுநிலை மனப்பாங்கும் கொண்டவர்கள் ஒரு சிலரேதான் இருக்கின்றனர். இன்றுள்ள நவீன கால உலகின் பிரச்சினைகளான போர் ஒழிப்பு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்குவது போன்ற பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண தகுந்த சந்தர்ப்பங்களும் வாய்ப்புகளும் ஏற்பட்டபோதிலும்கூட, அவையெல்லாம், மிகப் பொறுப்பு மிக்க இடங்களில் இருக்கும் பெரும் பெரும் உலகத் தலைவர்களேகூட பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டிருக்கின்றனர்,"

இவ்வாறு, பிரபல பிரிட்டிஷ் சரித்திராசிரியரான பேராசிரியர் ஆர்னால்டு டாயின் பீ என்பார், இங்கு நடைபெற்ற உலக விவகார இந்தியக் குழுவின் கூட்டத்தில், 'அணு யுகத்தில் ஜனநாயகம்' என்ற தலைப்பில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், 'உலகை எதிர்நோக்கியிருக்கும் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துவைக்க இன்றைய நவீன உலகம் பெரும் அளவிற்குத் துணைபுரிந்திருக்கிறது என்று கூறமுடியாது—அதை நாம் நம்பமுடியாது,' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசியிருப்பதாவது:—

"ஜனநாயகம் என்பது பற்றிய ஒரு அடிப்படை எண்ணமே—உருவமே பண்டை கிரேக்கத்தில் தான் ஏற்பட்டது. அந்த ஜனநாயகத் தத்துவத்தின் முழுத் தன்மையும், அப்போது அந்நாட்டில் நடைபெற்ற நகர சர்க்காரால் நிறைவு பெற்றது. அந்த நாட்டில் இம்முறை ஆட்சிதான் மிகச் சிறந்த முறையாக இருந்துவந்தது; ஏனென்றால், அந்தந்த சர்க்கார்களும் தங்களால் எந்த அளவு அதிகமாக வேலை செய்யமுடியுமோ அந்த அளவுக்கு வேலை செய்து அதன் மூலம் அந்தந்த சர்க்காரின் கீழ் உள்ள மக்களில் ஒரு பெரும் பகுதியினருக்கு நன்மை ஏற்படுவதாக இருந்தது. ஆனால் வரவர, மாநிலங்களின் அளவு அதிகமாக அதிகமாக, ஜனநாயகத் தத்துவத்தில் குறைகள் ஏற்படலாயின.

'சனநாயகத்தின் வெற்றிக்குப் புத்திக் கூர்மையும், புத்துணர்வும் பெற்ற வாக்காளர்களும் முக்கியப் பங்கேற்பவர்களாவர். ஆனால் இன்றைய நவீன யுகத்தில், கூட்டம் கூட்டமாக மக்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டிருப்பதின் விளைவாக, சனநாயகம் ஓரளவிற்கு தரம் குறைந்துவிட்டிருக்கிறது. சாதாரண சிறிய மைனாரிட்டிகள் கூட, வாக்காளர்களின் அனுபவக் குறைவையும், அறிவீனத்தையும் பயன்படுத்திக்கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் நிலைமை இதனால் ஏற்பட்டு விடுகிறது.

"இந்தக் கட்டத்தில்தான் நிலையான கொள்கையும், சாந்த மனப்பான்மையும் கொண்ட பெரும் பெரும் அரசியல் தலைவர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். இந்த இடத்திலாயினும் உலக அரசியல் தலைவர்கள் எல்லாம் உலக யுத்த அபாயத்தை நீக்கவும், உலகில் நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைத் தவிர்க்கவும் உறுதிகொள்வார்களேயானால்தான் சனநாயகம் இயங்க முடியும். ஆனால், துரதிருஷ்டவசமாக, பெரிய செல்வாக்குப் பெற்ற அரசியல் தலைவர்களெல்லாம் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியாதவர்களாக மாறிவிட்டனர்"

பொதுத் தேர்தலில் ஆள் மாருட்டத்தைத் தடுக்க!

தேர்தல் குழுவின் புதிய விதிமுறை

புதுடில்லி, பிப் 5—

சில நகரங்களில், பல தடவைகளில் தேர்தல் வாக்குப் பதிவுகளின்போது ஆள் மாருட்டங்கள் நடைபெறுவதாக வந்திருந்த புகார்கள் மீது தேர்தல் குழுவினர், அண்மையில் பல கட்சியினரையும் கலந்து ஆள் மாருட்டம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆலோசித்தனர். அப்போது, எல்லாக் கட்சியினருமே தேர்தல் வாக்குப் பதிவின்போது, ஒவ்வொரு வாக்காளரிடமும், அவரிடம் வாக்குச் சீட்டைக் கொடுப்பதற்கு முன்னால், அவரவர் கையெழுத்தை வாங்குவது என்றும், இப்படிச் செய்தால் ஓரளவுக்கு ஆள்மாருட்டம் செய்யப்படுவதைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் ஆலோசனை கூறப்பட்டது.

இந்த யோசனைகளை ஏற்றுக்கொண்ட தேர்தல் குழு அதற்கான ஒரு விதியையும் ஏற்படுத்தியிருக்கிறது. அவ்விதிப்படி ஒவ்வொரு வாக்குப் பதிவு நிலையத்திலிருக்கும் அதிகாரியும், வாக்காளர்களின் அடையாளத்திற்காக, அவரவர் கையெழுத்துக்களை கேட்பாராம்.

எந்தெந்த பதிவு நிலையங்களில் இந்த விதி பொருந்தும் என்பது குறித்த ஒரு பட்டியலையும் ஏற்கனவே சர்க்கார் வெளியிட்டிருக்கிறது. பொதுவாக ஒரு இலட்சமும் அதற்கு மேற்பட்ட தொகையும் கொண்ட மக்கள் வாழும் ஒரு பகுதி—அப்பகுதி முழுவதுமாக ஒரு நகரில் உள்ளடங்கினதாகவோ அல்லது நகரின் ஒரு பகுதியாகவோ அமைந்திருந்தாலும் அங்கு இந்த விதிமுறை செல்லும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பாராளுமன்றத்திற்கும், மாநில சட்டசபைகளுக்குமாக ஒரே தடவையில்வாக்குப்பதிவு நடைபெறும் இடங்களில், வாக்குப்பதிவு செய்யும் அனைவரும், சட்டசபைத் தொகுதிக்கு வாக்குப் பதிவு செய்வதற்கான வாக்குச் சீட்டு கொடுக்கப்படும்போதுதான் அடையாளச் சீட்டில் கையெழுத்துப் போடக் கேட்டுக்கொள்ளப்படுவாராம். எனவே, அவர், பாராளுமன்றத் தேர்தலுக்கு வாக்குப் போடும்போது மீண்டும் ஒரு தடவை—இரண்டாவது முறையாகக் கையெழுத்துப் போடத் தேவையில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை சர்க்காரும், ஆள் மாருட்ட நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான சில வழி முறைகளைக் குறித்து அறிக்கையொன்று விடுத்திருக்கின்றனர்; அதாவது, ஒவ்வொரு வாக்காளரும், வாக்குச் சீட்டுகள் கொடுக்கப்படுவதற்கு முன்னால், அவருடைய இடதுகை ஆள்காட்டி விரலில (கட்டை விரலுக்கு அடுத்த விரல்) அழிக்க முடியாத மையினால் அடையாளம் தரவேண்டும் என்றும், அதில், அந்தந்த அதிகாரிகளுக்குத் திருப்தி ஏற்பட்டாலதான் வாக்குப் பதிவு செய்யமுடியும் என்றும் அவ்விதி கூறுகிறது. இதுதுடன் மட்டுமல்லாமல், ஏற்கனவே அறிவித்துள்ள சில குறிப்பிட்ட தொகுதி வாக்காளர்கள், அடையாளச் சீட்டுக்களில் கையெழுத்திட வேண்டும் குறிப்பிட்ட இத்தொகுதிகளைத் தவிர்த்த மற்ற இடங்களில், இந்தக் கையெழுத்துப் போடுவதென்பது அவசியமில்லை என்றும், எனினும் அந்தந்த நிலைய அதிகாரி தேவையென்று கருதினால், கையெழுத்துப் போடும்படிக் கேட்க அதிகாரம் உண்டு என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அரிசி விலை இறங்குமாம்!

புதுடில்லி, பிப். 4—

மாநிலங்களிலிருந்து மத்திய அரசாங்கம் அரிசி வாங்கப் போவதில்லையென்று அறிவித்திருக்கும் காரணத்தினால், சில இடங்களில் அரிசி விலை உயர்ந்திருப்பதைக் கட்டுப்படுத்த உதவியாக இருக்குமென்றும் கருதப்படுகின்றனவாம்.

இந்த ஆண்டில் எழு இலட்சம் டன் அரிசி இறக்குமதி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

நின் விடுதலை கெட்டு வாழ்வுபட்டது போதாதா?

'அகில இந்தியா'க்களுக்கு அர்ப்பணம்

தமிழ் நாட்டுத் திட்டங்களுக்கு டெல்லி தரும் நிதி?

1957—58-ம் ஆண்டிற்கான சென்னை சர்க்காரின் வரவு-செலவு மதிப்பீட்டின்படி, இம்மாநிலத் திட்டச் செலவுகளுக்கு ரூ 42.13 00,000 தேவைப்படலாம் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மாநில சர்க்காரின் இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்த திட்டக்குழு ரூ 34 02,00,000 மட்டும் ஒதுக்குவதென முடிவுசெய்து விட்டதாம்.

இந்தத் தொகையில் விசைத் திட்டத்திற்காகும் செலவுதான் அதிகபட்சச் செலவு என்றும் அதற்கான மொத்தத் தொகையே ரூ 13 13,00 000 என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மற்றத் துறைச் செலவுகள் பற்றிய விவரம் :—சுகாதாரம் : ரூ 3 07 00,000 ; கல்வி : ரூ. 2,59,08,000; நீர்ப்பாசனம் : ரூ 2,51 000 00; தேசிய சமுதாய நலத் திட்டம் : ரூ 2 45 00,000; கிராமச் சிறு தொழில்கள் ரூ 1,76 00 000; விவசாயம் ரூ 1,04,00,000; பிற்பட்ட வகுப்பினருக்கு : ரூ. 99,00,000; வைத்தியம் : ரூ 92.05.000; இடைசரி திட்டம் : ரூ. 82 00,000; சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் : ரூ 85,00,000

மகளிர் மன்றத் தேர்தல் நிதியளிப்பு

10—2—57-ல், சென்னை எஸ், ஐ. ஏ. ஏ. திடலில் நடைபெறவிருக்கும் தி. மு. கழகச் சிறப்பு மாநாட்டில், மகளிர் மன்றச் சார்பில் தி.மு. கழகத் தேர்தல் நிதி அளிக்கப்படும். மாநாட்டில் பணியாற்ற மகளிர் மன்றத் தொண்டர் படை உருவாகியுள்ளது. அதில் பங்குபெற விரும்புவோர் வெள்ளைச் சேலையும் கருப்புச் சட்டையும் அணிந்துவரக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தோழர் என்.வி. நடராசனை ஆதரித்து தேர்தல் பொதுக்கூட்டங்கள்

கழக முன்னணி வீரர்கள் முழக்கம்

சென்னை 5-வது வட்டம் கொருக்குப்பேட்டை தி. மு. கழகக் கிளையின் சார்பில், 4—2—57 அன்று மாலை தி மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

கூட்டத்தில், அத்தொகுதி தி மு. கழக அபேட்சகரான தி. மு கழக துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் தோழர்கள் டி. கே. சீனிவாசன், அ. பொன்னம்பலனார், வி. எஸ் கோவிந்தராசன் ஆகியோர் கலந்துகொண்டு அரியபல கருத்துரைகளை வழங்கினர்.

கூட்டத்திற்கு தோழர் இராசேந்திரன் முன்மொழிய, தோழர் டி. ஆர். சண்முகம் வழிமொழிய தோழர் இரா. நலங்கிள்ளி தலைமை வகித்தார்.

தலைவர் தமது உரையில், காங்கிரஸ் நாட்டு மக்களுக்குக் கடந்த 8, 9 ஆண்டுகளாகச் செய்த கொடுமைகளையும் துரோகங்களையும் காட்டி தி மு கழகம் தேர்தலில் நின்று மக்களின் ஆதரவைக் கோருகிறது என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள் மக்களுக்கு நற்பணியாற்றுவதே என்றும் பேசினார்.

தலைமையுரைக்குப்பின், தோழர் என். வி. நடராசன் அவர்கள், தி மு கழகத்தின் கடந்தகால—இக்கால நடைமுறைகளை விளக்கி நாட்டு மக்களுக்காகவே பணியாற்றும் தி மு. கழகத்திற்குப் பொது மக்கள் ஆதரவு அளிக்குமாறும், தி. மு. கழகத்தின் சார்பில் அத்தொகுதியில் சட்டசபைத் தேர்தலுக்கு நிறுத்திவைக்கப்படும் தமக்கு மக்கள் வாக்களித்து வெற்றி தேடித்தருமாறும், மக்களின் மகத்தான வாக்குரிமைகளைப் பெற்று சட்டமன்றம் ஏறினபின், காங்கிரசாரைப்போல் சொன்ன சொல்லைமறந்து மக்களை பிரிந்து வாழ்பவர்கள் தி மு கழகத்தவரல்ல என்பதை உணர்த்தியும் சுருக்கமாகச் சொற்பொழிவாற்றினர்.

அடுத்து தோழர் வி எஸ். கோவிந்தராசன் அவர்கள் சிறிது நேரம் தி மு. கழகக் கொள்கை கோட்பாடுகள் இலட்சியம் குறித்தும், மாற்றாரின் குற்றச் சாட்டுகளுக்குத் தக்க பதிலளித்தும் சிறிதுநேரம் உரையாற்றினர்.

அடுத்து தோழர் டி. கே. சீனுவாசன் அவர்கள், காங்கிரசாரின் கடந்த காலக் கொள்கைகளையும் நடைமுறைகளையும், இக்கால கொள்கைகளையும், நடைமுறைகளையும்—குறிப்பாக நேரு பண்டிதரின் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பேச்சுக்களையும் நடவடிக்கைகளையும் சுட்டிக் காட்டி சீரியதோர் உரை நிகழ்த்தினர்.

பின்னர், சென்னை 16-வது வட்டத்தைச் சேர்ந்த வள்ளுவர் வாசகசாலை நிலையத் தோழர் வி. ஜி. கிருஷ்ணன் அவர்கள், மிகச் சிறந்த முறையில், மேடையில், சிறிதுநேரம் உடற்பயிற்சி விளையாட்டுகள் செய்து மகிழ்வித்தார். உடம்பு முழுமையிலும் வளையங்களை அணிந்துகொண்டு பலபல விதமான விளையாட்டுக்களைக் காட்டி, இறுதியில் அவ்வளையங்கள் ஒன்றில் பட்டாசு ஒன்றை வெடிக்க வைத்து, அதிலிருந்து உதயசூரியன் பொறிக்கப்பட்ட தி. மு கழகக் கொடி பறக்கவிட்ட நிகழ்ச்சி, உண்மையிலேயே மிக மிகப் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருந்தது!

இறுதியாகத் தோழர் பொன்னம்பலனார் அவர்கள், காங்கிரசாருடைய தகுதி, திறமை, அறிவாற்றல் ஆகியவற்றையும், தி. மு. கழகத்தினரின் தகுதி, திறமை, அறிவாற்றல் ஆகியவற்றையும் எடைபோட்டு, மக்கள் உண்மை உழைப்பாளிகளை ஆதரித்து வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக்கொண்டு நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

இறுதியில் தலைவர் முடிவுரையுடன் நன்றி நவிலப்பட்டு இரவு சுமார் 10 மணி அளவில் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. - நி.)

★

16-வது வட்டத்தில்:

அன்று இரவு 7 மணியளவில், சென்னை அண்ணாபிள்ளைத் தெருவில், 16-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில், தேர்தல் கூட்டம் சிறப்பான முறையில் நடைபெற்றது.

தோழர் கே. கணபதி முன்மொழிய, தோழர் டி முத்து வழிமொழிய கூட்டத்திற்குத் தோழர் ஜே டி. பாண்டியன் தலைமை தாங்கினர்.

தோழர்கள் ப. ஆசைமுத்து, ம. பொ. வேதாசலம், கோ. செங்குட்டுவன் ஆகியோர் பேசியபின், தோழர் முகவை - ஆர். எஸ். பாண்டியன் அவர்கள், மாற்றுக்

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை சர்க்காருக்கு திட்டக் குழு கூறும் யோசனை

மேலும் வரிச்சுமையை அதிகரிக்க வேண்டுமாம்

புதுடில்லி, பிப். 3—

ஐந்தாண்டுத் திட்டச் செலவினங்களுக்காக, சென்னை சர்க்கார் கடன் கோரிக்கை எழுப்புவதைக் காட்டிலும், வரிவிதிப்பின் மூலம் அத்தொகையைப் பெறுவதில் கவனம் செலுத்துவது நல்லது என்று திட்டக்குழு கருத்தறிவித்திருக்கிறதாம். எனவே சென்னை சர்க்கார் திட்டக் காலம் முழுமைக்குமாக ரூ. 40-கோடிக்கு மேல் கடன் எழுப்பக் கூடாது எனவும் வரையறுத்துவிட்டிருக்கிறதாம், திட்டக்குழு!

இந்தவகையில், சென்னை சர்க்கார், சென்ற நிதி ஆண்டில் ஏற்கனவே ரூ 13,08,00,000 கடன் எழுப்பியிருக்கிறது. எனவே வருகிற நிதி ஆண்டிலும் அதிகபட்சம் ரூ 10 கோடிக்குமேல் கடன் எழுப்பமுடியாதெனவும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது அந்தக் குழுவினரால்!

இதனிடையில் சென்னை மாநில 1957—58-ம் ஆண்டிற்கான திட்டச் செலவுகளுக்கு மத்திய சர்க்காரும் மொத்தம் ரூ 18-கோடிவரைதான் உதவக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுவிட்டது!

தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரையில்!

மின்சார இரயில் திட்டம்

சென்னை, பிப். 4—

தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரையில் மின்சார இரயில் விடுவதற்கான திட்டம் மும்முரமாக நடைபெற்று வருகிறதென்றும் தற்போது பாதையை பலப்படுத்தும் வேலை நடைபெற்று வருவதாகவும், சூயஸ் நெருக்கடியின் காரணமாக, மின்சாரச் சாதனங்கள் வருவது சிறிது தடைபட்டுள்ளதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

****

நாளை முதல்

?

இங்கே கவனியுங்கள்

****

ஐ. நா. தீர்மானத்திற்குக் கட்டுப்பட இஸ்ரேல் மறுக்கிறது!

ஜெருசலம், பிப் 3—

'எகிப்திய மண்ணிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும்' என்ற ஐ. நா. தீர்மானத்தை ஏற்க இஸ்ரேல் மறுத்து விட்டது என்று தெரிகிறது.

இஸ்ரேலின் பாதுகாப்பிற்கும், மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்படுவதற்கும் இஸ்ரேலின் எல்லைகளில் எகிப்து நடத்திவரும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டியது அவசியமாகும்; இஸ்ரேலுக்கு ஒரு சட்டமும், எகிப்துக்கு ஒரு சட்டமுமாக இரண்டு சட்டங்கள் இருக்க முடியாது; சட்டம் என்றால் எல்லோருக்கும் ஒரே சட்டம்தான்'

என்று, ஐ நா-வின் தீர்மானம் குறித்து விமர்சித்த இஸ்ரேல் வெளி விவகார இலாகா கூறியிருக்கிறதாம்.

ஐ. நா. தீர்மானம் குறித்து இஸ்ரேல் பிரதமர் பென்குரியன் நோய் வாய்ப்பட்டு படுக்கையிலிருந்துகொண்டே தெரிவித்த கருத்துக்களையே வெளி விவகார இலாகா வெளியிட்டுள்ளதாம்,

விசைத்தறித் திணிப்பு

அய்யம்பேட்டை, பிப். 1—

அண்மையில் இங்கு நடைபெற்ற தஞ்சை மாவட்டக் கைத்தறி நெசவாளர் மாநாட்டில், 'இந்த நாட்டில் விசைத்தறிகளைப் புகுத்தக் கூடாது' என்று மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சென்னைக்கு அருகில் 'டயர்' தொழிற்சாலை

'டன்லப்' கம்பெனியின் திட்டம்

சென்னை, பிப். 5—

சென்னை நகரத்திற்கு சமீபமாக உள்ள அம்பத்தூருக்கும்—கொரட்டூருக்கும் மத்தியில் 'டன்லப்' கம்பெனியார் ரூ 3 கோடி செலவில் ஒரு மோட்டர் 'டயர்' உற்பத்தித் தொழிற்சாலையை ஏற்படுத்த முனைந்துள்ளனர்.

இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அந்தப் பகுதியில் 120 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து தருவதற்கு அரசாங்கம் இசைந்துள்ளதாம்.

துவக்கத்தில் இந்தத் தொழிற்சாலையில் 1,000 பேர்களுக்கு வேலை கிடைக்கக்கூடுமென்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

12 அமெரிக்கக் கப்பல்கள்

இந்தியா வாங்கக்கூடும்?

புதுடில்லி, பிப் 4—

இந்தியக் கடலோர வர்த்தகத்திற்காக 12 'லிபர்டி' கப்பல்களை வாங்குவதற்கு அமெரிக்க அரசாங்கத்துடன் இந்திய அரசாங்கம் கலந்தாலோசித்து வருவதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

அரசாங்க ஊழியர்களுக்கு மருத்துவ வசதியா?

சென்னை சர்க்காருக்கு அக்கரை பிறந்துவிட்டது?

டில்லியிடம் திட்டம் தருமாறு கேட்கின்றனராம்

புதுடில்லி, பிப். 4—

88,000 அரசாங்க ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினருமாக மொத்தம் 3,20 000 பேர் பயனடையும் மருத்துவ உதவித் திட்டமொன்றை டில்லி வகுத்திருக்கிறது.

ரூ 35 இலட்சம் இம்மருத்துவ வசதிக்காக செலவிடப்படுகிறது; இதில் ரூ 10 இலட்சம் அரசாங்கம் செலவிடுகிறது; மீதிச் செலவை அரசாங்க ஊழியர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். ஊதியத்திற்கு ஏற்றவாறு செலவுத் தொகை வசூலிக்கப்படுகிறது.

இவ்வசதியைத் தங்களுடைய ஊழியர்களுக்கும் அளிப்பதற்குத் திட்டம் வகுக்க விரும்புவதால், இது பற்றிய முழுத் தகவல்கள் தேவையென டில்லியிடம் மத்தியப் பிரதேசம், பம்பாய் மாநில அரசுகள் கேட்டிருப்பதைப்போல் சென்னை அரசாங்கமும் டில்லியிடம் விவரங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுவதற்கு அக்கறை எடுத்துக்கொண்டுள்ளதாம்.

செலவில் ஒரு பகுதியை சர்க்காரும் மற்றொரு பகுதியை ஊழியர்களும் ஏற்பார்கள்.

கேள்வியும்—பதிலும்!

★

கேள்வி : 'பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம்தான் கம்யூனிஸ்டுகள் இலட்சியம்; அவர்களுக்கு பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை' என்றும், 'பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் நடைமுறைக்கு உதவாத தத்துவம்' என்றும் நேரு பேசினாரே! இதற்கு உங்கள் பதில் என்ன?

பதில் : பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்ற தத்துவம் இன்று நடக்கும் தேர்தலில் வரும் தேர்தல் பிரச்சினையல்ல. அடுத்த மாதம் நடக்கப்போகும் தேர்தலில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்திற்காக ஓட்டுப்போடுங்கள் என்று கம்யூனிஸ்டுகள் கேட்கவில்லை.

....

பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை என்றால், கம்யூனிஸ்டுகள் சென்ற 5 ஆண்டுகளாக பார்லிமெண்டிலும் சட்டசபைகளிலும் வேலை செய்திருப்பார்களா?

மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு மீண்டும் பலமான சட்டசபை எதிர்ப்பாக தன்னையும் தன்போன்ற ஜனநாயகக் கட்சிகளையும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சி கேட்குமா?

அரசு வீழ்ந்து மானம் தாழ்ந்தது காணுதா?

சமத்துவ உணர்ச்சியைத் தூண்டியவர் எவர்?

நாட்டின் முன்னேற்றத்திற்கு தி. மு. கழகமே அஸ்திவாரமிட்டது

சென்னை சிறப்புக் கூட்டத்தில் ஆசைத்தம்பி முழக்கம்

சென்னை 8-வது வட்டத் தி மு கழகச் சார்பில் கடந்த 3-ந் தேதியன்று காலை சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், 'தொழிலாளர் பிரச்சினையும் தி மு. கழகமும்' என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தின தோழர் ஏ வி. பி ஆசைத்தம்பி அவர்களுடைய சொற்பொழிவின் சாரம் இங்கு தரப்படுகிறது :—

"உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்—நிலப்பிரபுக்கு அல்ல என்ற கிளர்ச்சி இப்போது உரம் பெற்று வருவதை நாம் காண்கிறோம். இதை, தாங்கள்தான் உருவாக்கினதாகக் கூறிக்கொள்கிறார்கள் கம்யூனிஸ்டு நண்பர்கள்.

"உழுபவனுக்கு நிலம் சொந்தம்—நிலப்பிரபுக்கு அல்ல என்று சொன்னாலும், நிலத்திற்குச் சொந்தக்காரன், அந்த நிலம் தன்னுடையதுதான் என்பதை நிலைநாட்டுவதற்குக் கையில் 'பட்டா' வைத்திருக்கிறான்.

"ஆனால், ஒரு 30 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் உள்ள நிலைமைகளைச் சற்று எண்ணிப் பார்ப்போம்; ஒரு தெரு இருக்கிறதென்றால் அது பொதுச் சொத்து; சர்க்காருக்குச் சொந்தமானது; யாருக்கும் உரிமையற்றது. அத்தெருவில், வரி செலுத்தும் எந்தக் குடிமகனும் நடந்து செல்ல உரிமை உண்டு. ஆனால், பொதுத் தெருவில் நடந்து செல்ல உரிமை இருந்தும் அவன் நடந்துபோகக் கூடாது என ஒரு தீண்டப்படாதவன தடுக்கப்பட்டபோது அதைப் பற்றிப் பேச முன்வரவில்லையே, இந்தக் கம்யூனிஸ்டு நண்பர்கள், ஏன்? இந்தக் கொடுமையைக் கண்டித்தவர்கள் நாங்களா, அவர்களா?

"காங்கிரஸ் நம்மை எதிர்க்கிறது; அந்தக் காங்கிரசுக்குப் பெரியார் ஆதரவு இருக்கிறது; கம்யூனிஸ்டுகளின் மறைமுக ஆதரவு இருக்கிறது; தமிழரசுக் கழகத்தின் ஆதரவு இருக்கிறது. இவையெல்லாம் பக்கபலமாக வைத்துக்கொண்டு நம்மை எதிர்க்கும் காமராசர், இந்த நாட்டுக்குச் சாதித்தது என்ன?

"இதை, இந்த நாட்டு மக்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; ஏனென்றால், எந்த ஒரு நாட்டில் சிந்திக்கும் சக்தியுடையோர் வாழ்கிறார்களோ அந்த நாட்டில்தான் உண்மையான சனநாயகம் மலர முடியும். ஆனால், நமது நாட்டில் 'துரதிருஷ்டவசமாக அந்த சிந்திக்கும் ஆற்றல் வளரவில்லை; வளராத அந்த சிந்திக்கும் ஆற்றலை வளர்க்க தி. மு. கழகம் பாடுபடுகிறது.

"வேலை செய்கிற ஒரு தொழிலாளி, முதலாளியிடம் சென்று கூலிகேட்கும்போது, தானும் ஒரு மனிதன்தான்; முதலாளியைவிடத் தான் ஒன்றும் தாழ்ந்தவனில்லை—என்ற உணர்ச்சி பெறவேண்டும். அந்த உணர்ச்சி தொழிலாளியிடம் ஏற்பட்டால்தான் நாட்டில் உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற நிலை மறையும். அந்த உணர்ச்சியைத் தூண்டத்தான் தி. மு. கழகம் பாடுபடுகிறது.

"ஆனால் கம்யூனிஸ்டுகள் சொல்வதெல்லாம், 'இதெல்லாம் ஒன்றும் தேவையில்லை; பணம் இருந்தால் சாதி ஒழிந்துவிடும்' என்றுதான். ஆனால் நாங்கள் சொல்வது, 'இந்த நாட்டில், பணம் இருந்து விடுவதால் மட்டும் உயர்ந்தவன் — தாழ்ந்தவன் என்ற வேறுபாடு போய் விடாது' என்று! வேண்டுமானால், வேறு நாடுகளில் அந்த நிலை ஏற்படலாம் ஏனென்றால் அந்த நாடுகளின் சமுதாய அமைப்பு வேறு—இந்த நாட்டுச் சமுதாய அமைப்பு வேறு.

"ரஷ்யாவைப் பார்த்தால், அங்கு முதலாளி—தொழிலாளி என்ற இரண்டே வர்க்கங்களைத்தான் அன்று காண முடிந்ததே தவிர, சாதி வித்தியாசத்தைக் காண முடியவில்லை. இங்கு அந்த சாதிப் பாகுபாடு — சமுதாய அமைப்பு முறையில் கோளாறு இருப்பதால் பணம் இருந்து விடுவதால் மட்டும் மாற்றம் ஏற்பட்டு விடாது.

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

★★★★★★★★★★★★★★★★★★

அறிவிப்பு

10—2—57 அன்று சென்னை எஸ். ஐ. ஏ. ஏ., திடலில் நடைபெற இருக்கும் தி. மு. கழகத் தேர்தல் சிறப்பு மாநாட்டில் சிற்றுண்டி, குளிர்பானங்கள், வெற்றிலை பாக்கு விற்கவும், சைக்கிள் நிறுத்தும் வாடகை பெறவும், மற்றும் புத்தக நிலையம் அமைக்கவும் விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியில் என்னைச் சந்திக்க வேண்டுகிறேன் :—

சி. ஆர். பாலசுந்தரம்
(டெலிபோன் எண் 4256)
ஸ்டால் பொறுப்பாளர்,
149, ... ரோடு,
சென்னை-1.

நெல்லை நகர்

தி. மு. கழக உறுப்பினர்கட்கு:

"10—2—57 காலை 10 மணிக்கு, நெல்லை சந்திப்பு ஆர் வி. லாட்ஜ் மாடியில், நகர் தி மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். பொதுத் தேர்தலில் கழக ஆக்க வேலைகள் குறித்து ஆலோசிக்கப்படும். தோழர்கள் அனைவரும் தவறாது வருகை தருமாறு வேண்டுகிறேன்,"

என்று, நெல்லை நகர் தி மு. கழகத் துணைச்செயலாளர் இரா. சு இராமச்சந்திரன் அறிவிக்கிறார்.

பம்பாய் தி. மு. கழகக் கிளைத் தோழர்கட்கு:

"தி மு கழகத் தேர்தல் நிதி வசூலிக்க நன்கொடைச் சீட்டுகள் பெற்றுச் சென்ற கிளைக் கழகச் செயலாளர்களும் தனிப்பட்ட தோழர்களும், தாங்கள் வசூலித்தத் தொகையையும் நன்கொடைச் சீட்டின் அடிக்கட்டையையும் இதிங்கள் 12ம் நாள் அன்று 'திராவிட நகத்'தில் தவறாது வந்து செலுத்திடுமாறு வேண்டுகின்றேன்,"

என்று பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுச் செயலாளர் எஸ். தியாகராசன் அறிவிக்கிறார்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள்

★

சென்னை:

தியாகராயநகர் :
பஸ் நிலைய மைதானத்தில்
47-வதுவட்ட தி. மு க ஆண்டுவிழா
7—2—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : பெ. கு. சாமி
பேசுவோர் :
க. அன்பழகன்
பி. பாலசுப்பிரமணியம்
ஜேசுபாதம்

★

எழும்பூர் :
8—2—57 மாலை 6 மணிக்கு
எழும்பூர் ரேங்காச்சாரி பூங்காவில்
தலைவர் :
ஆர். கோபாலகிருஷ்ணன்
பேசுவோர் :
க. அன்பழகன்
சத்தியவாணிமுத்து
அறிவுடைநம்பி

★

ஆழ்வார்பேட்டை :
திருவள்ளுவர் சாலைக்கு
அருகிலுள்ள திடலில்
8—2—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : இரா. அகமழகன்
பேசுவோர் :
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
காஞ்சி-கல்யாணசுந்தரம்
கை. பிரமையா

★

அறங்கோட்டை :
தி. மு. கழகத் துவக்கவிழா
8—2—57 மாலை 6 மணிக்கு
அம்மன் கோவில் எதிரில்
தலைவர் : ந. குமாரசாமி
பேசுவோர் :
பா. வே. செயராமன்
ஆ. மா. வாரி
கோள்கைப்பித்தன்
எஸ். ஆர். இராதா
வி. காளிதாசன்

★

இரத்தின சபாபதிபுரம் :
தேர்தல் அலுவலகத் திறப்பு விழா
7—2—57 இரவு 7 மணிக்கு
13-வதுவட்டம்—லாலி ரோடில்
திறப்பாளர் : பெ.சு. மாணிக்கம்
பேசுவோர் :
கே. சிவசாமி
சி. டி. தண்டபாணி
சு. ஆறுமுகம்
வெ. கிருட்டிணமூர்த்தி
இரா. நடராசன்

★

மதுராந்தகம்

தொகுதியில்
7—2—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : பி. சிவானந்தம்
பேசுவோர் :
அறிவுடைநம்பி
ஜே. ஏ. வகாப்
கோதண்டம்

ஸ்டுடன்ஸ் பாக்குத்தூள்கம்பெனி தொழிலாளர்கள் சார்பில்

★

தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம்

8—2—57 வெள்ளி மாலை 6½ மணிக்கு, சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை முல்லா சாயபு தெருவில் (டி. டி. வி. உயர்நிலைப் பள்ளிக்கு எதிரில்) சென்னை ஸ்டுடன்ஸ் பாக்குத்தூள் கம்பெனித் தொழிலாளர் சார்பில், தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம் தோழர் சிவானந்தம் தலைமையில் நடைபெறும். துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் ஏ.வி.பி.ஆசைத்தம்பி, கோ.செங்குட்டுவன், சி. ஆர். பாலசுந்தரம், தோழியா சத்தியவாணிமுத்து; சற்குணம், அழகா ஆகியோர் பேசுவர்.

காஞ்சி தொகுதியில் அண்ணா

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

பிப்ரவரி
7 : மாலை—காஞ்சீபுரம், புத்தேரித் தெரு
8 : மாலை—காஞ்சீபுரம், கங்கைகொண்டான் மண்டபம்.
9 : மாலை 6-மணி—காஞ்சீபுரம் காளியம்மன் கோவில் தெரு (அரங்கசாமி நினைவு மன்றம்)
" இரவு 10-மணி—காஞ்சீபுரம் கரிக்கினில் அமர்ந்தவன் கோயில் தெரு
11 : மாலை — சின்ன காஞ்சீபுரம், திருச்சோலைத் தெரு, திருவள்ளுவர் கழகம்.
17 : இரவு—பரந்தூர் கிராமம் (நாடகத் தலைமை)
(10-2-57 சென்னை சிறப்பு மாநாடு)

ஸ்ரீபெரும்புதூர்

சி.வி.எம். அண்ணாமலை

தொகுதியில் பிரச்சாரகூட்டங்கள்

★

பட்டாபிராம் :
8—2—57 மாலை 6-மணிக்கு
பேசுவோர் :
அ. பொன்னம்பலனார்
இராம. அரங்கண்ணல்
ஆர். எஸ். பாண்டியன்
டி. என். சம்பந்தம்
சி. வி. எம். அண்ணாமலை

* * *

சுங்குவார்சத்திரம் :
9—2—57 மாலை 6-மணிக்கு
பேசுவோர் :
அ. பொன்னம்பலனார்
ஆர். எஸ். பாண்டியன்
டி. என். சம்பந்தம்
சி. வி. எம். அண்ணாமலை

* * *

திருமழிசை :
7—2—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
அ. பொன்னம்பலனார்
ஆர். எஸ். பாண்டியன்
டி. என். சம்பந்தம்
சி. வி. எம். அண்ணாமலை

நாமக்கல் தொகுதி குழு உறுப்பினர்கட்கு:

7—2—57 மாலை 5 மணிக்கு, நாமக்கல் தி. மு. கழகத் தேர்தல் அலுவலகத்தில், தொகுதிக் குழுக் கூட்டம் கூட இருப்பதால் அனைவரும் தவறாது வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

திருத்துறைப்பூண்டி

தொகுதிக் குழு உறுப்பினர்கட்கு:

"9—2—57 காலை 10 மணிக்கு, திருத்துறைப்பூண்டி செல்வம் சோடா பாக்டரியில் திருத்துறைப்பூண்டி தி. மு. கழகத் தொகுதிக் குழு உறுப்பினர் கூட்டம் தோழர் டி கே. சீனிவாசன் முன்னிலையில் நடைபெறும். தொகுதியைச் சேர்ந்த கிளைக் கழகச் செயலாளர்கள், கழக முக்கியஸ்தர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்"

என்று, தோழர் வை. சுப்பிரமணியம் அறிவிக்கிறார்.

சென்னை 12வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

9—2—57 இரவு 7-30 மணியளவில் 5/22 மரக்காயர்லெப்பைத் தெரு, கழகப் பணிமனையில் 12வது வட்ட தி மு கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

என். வி. நடராசனை...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கட்சிக்காரர்கள் இழிவாகப் பேசி வருவதைக் கண்டித்துச் சிறிது நேரம் சொற்பொழிவாற்றினார்.

அடுத்து, தி மு. கழகத் துணைப் பொதுச்செயலாளரும், பேசின் பிரிட்ஜ் தொகுதி தி. மு. கழக அபேட்சகருமான தோழர் என்.வி. நடராசன் அவர்கள், 'நாங்கள் ஆண்டவனைப் பழிக்கிறவர்கள் என்று கூறுகிறார்கள்; ஆனால் அந்த ஆண்டவன் எங்கள் பக்கம் நின்று துணைபுரிந்துவருகிறார்; அரசியலில் தில்லுமுல்லுகள் செய்யும் சில சூழ்ச்சிக்காரர்கள் தங்களுக்கும் உதயசூரியன் சின்னம் வேண்டுமென்று போட்டிக்கு நின்றாலும், அவர்கள் நம்பும் ஆண்டவன் நமக்குத்தான் வெற்றியைத் தருகிறார்' என்று ஓட்டுப் பிச்சையைத் தந்திர முறைகளால் வாங்குபவர்களைப் பற்றிய நிகழ்ச்சிகளைக் கூறியும், அரும்பெரும் தியாகிகள், உத்தமர்கள் வளர்த்த காங்கிரசில் இன்று கள்ளமார்க்கெட்காரர்களும், ஏழையை உறிஞ்சிப் பிழைக்கும் பெரிய ஆலை முதலாளிகளும்தான் கொட்டமடிக்கிறார்கள் என்பதை விளக்கியும், காங்கிரஸ் இந்த நாட்டு மக்களுக்குச் செய்த துரோகங்களையும் கொடுமைகளையும் விளக்கி, வருகிற தேர்தலில் கழகத் தோழர்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அடுத்து தோழர் சி முனுசாமி (கவுன்சிலர்) பேசுகையில், 'இந்தத் தொகுதியில் போட்டியிடும் தோழர் என். வி நடராசன் அவர்களை மக்கள் ஆதரித்து சட்டசபைக்கனுப்பினால், நமக்கு நல்லது என்றும், 'அவர் நமக்கு நன்மை ஏதேனும் செய்யாவிடினும் நாம் அவரைக் கேட்க முடியும். ஏனெனில் அவர் நம்மோடு—நம்மிடத்திலேயே எப்போதும் வாழுகிறவர்' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, தோழர் வி. எஸ். கோவிந்தராசன் அவர்கள், தோழர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய அரும்பெரும் பொதுப் பணிகளைச் சுட்டிக்காட்டி, அவர் சட்டசபை சென்றால், மக்களை மதியாது ஆணவத்தோடு பேசித் திரியும் அமைச்சர்களைத் தட்டிக் கேட்பார் என்று உறுதிகூறி, அவருக்குப் பொதுமக்கள் ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டார்.

இறுதியாக, தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், தி மு. கழகம் ஒன்றே நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும் கட்சி என்பதைச் சான்றுகளுடன் விளக்கியும், ஏனைய கட்சித் தலைவர்களெல்லாம் வடநாட்டுக்காரர்கள் என்பதால் இந்நாட்டு மக்களின் உரிமை வாழ்வைப் பற்றி அக்கரை எதும் காட்டமாட்டார்கள் என்பதை விவரித்தும் காங்கிரசாட்சியிலே இதுவரை ஏற்பட்டுள்ள இரத்த வெள்ளம், பிணமலை, எலும்புக் கூடுகளாய் வாழும் மக்களின் இழிநிலை ஆகியவைகளைப்போக்க—மக்களின் நல்வாழ்விற்காகப் பாடுபடும் தி. மு. கழகத்திற்கு ஆதரவு தந்து கழகத் தோழர்களை வெற்றிபெறச் செய்யுமாறு கேட்டுக்கொண்டு அரியதோர் உரை நிகழ்த்தினார்.

கூட்டத்தில், 16-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தேர்தல் நிதிக்கு ரூ. 25 துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களிடம் தரப்பட்டது. தோழர்கள் என். வி. நடராசன், டி. கே சீனிவாசன், முகவை-ஆர். எஸ். பாண்டியன் ஆகியோருக்குக் கழகத்தின் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டது. கூட்டத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்துகொண்டு கூட்டத்தைச் சிறப்பித்தனர். (ந. நி.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம்.ஏ. அவர்களால் அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ.

எழு! விழி! சுடர்முகம் தூக்கு!